**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.24/2024 - PW-5**

| | |
|---|---|
| Name | திரு. நடராஜன் |
| Husband/Father Name | சம்பத் |
| Village /Area | கண்டிகை சயினபுரம் |
| Taluk | நெமிலி |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 34 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 02.07.2025.

**(எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர். எதிரி 5 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

அசா.1 எனது தந்தை. அசா.2 எனது தாயார், அசா.3 எனது சித்தி ஆவர்கள். 26.02.2016 அன்று வேகத்தடையை அப்புறப்படுத்தக் கூறி கேட்டதன் பேரில் எனது சகோதரர் தனசேகர் என்பவரை எனது சித்தபா கிருஷ்ணன் என்பவரையும் சித்தி தேன்மொழி என்பவரையும் கத்தியால் குத்தி காயப்படுத்தியதால் எனது சகோதரர் சென்னை ஸ்டேன்லி மருத்துவமனைக்கு சென்ற போது இறந்து விட்டதாக கூறியதின் பேரில் எனது தந்தை கொடுத்த புகாரின் பேரில் சம்பவ இடத்தை காவல் ஆய்வாளர்கள் பார்வையிட்டு வரைப்படம் வரைந்து என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது அதசா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் எனது பெரியப்பா தனஞ்செழியன் என்பவரும் கையொப்பம் போட்டார்.

போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

மனுவின் பேரில் குறுக்கு விசாரணைக்காக நிறுத்திவைக்கப்படுகிறது.

**ஒம்./-திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**